# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வியாழக்கிழமை நாள் 27.08.2026 காலை 10.30 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி சாதாரணக்கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

### பொருள்: 1

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டமானது. 156 பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 14599 மாணவ, மாணவியர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக 2 பொது சமையலறை அமைத்து, உணவு தயார் செய்யப்பட்டு மேற்படி பள்ளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மேற்படி திட்டமானது 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளதால், திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் 13734 மாணவர்களுக்கு கூடுதலாக உணவு தயார் செய்து விநியோகம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே, தற்போதுள்ள 2 பொது சமையலறையுடன், வார்டு எண்.47க்குட்பட்ட (Circuit House) சாலையில் உள்ள வார்டு குழு-IV அலுவலக வளாகத்தில் கூடுதலாக 4000 ச.அடியில் ஒரு புதிய பொது சமையலறை அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.200.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.200.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2026-2027ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் கல்வி நிதியில் பள்ளிக் கட்டிடங்கள் புதிதாக கட்டுதல்/மேம்படுத்துதல். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் கட்டுதல்/மேம்படுத்துதல் (4102001) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ 10.00 கோடியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

இ8/8659/2026(மையம்)

**தீர்மானம் எண்.488 பொருள்: 1 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 2**

நகர்ப்புற வளர்ச்சி – 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் 01.01.1980 வரை பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனையிடங்களை மனை வரன் முறைப் படுத்த ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிட்டுள்ளவாறு, அனைத்து விதிகளுக்கும் உட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல் 30.06.2027 வரை மனை வரன்முறை படுத்தும் வகையில் காலநீட்டிப்பு செய்து, அரசாணை (நிலை ) எண்.148 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(1)துறை நாள்.27.07.2026 அரசாணை வெளியிடப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

எப்1/8400/2026(மையம்)

**தீர்மானம் எண்.489 பொருள்: 2 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

F1/ 8400 /2026 fm

**சுருக்கம்**

நகர்ப்புற வளர்ச்சி – 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கு உட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல் 30.06.2027 வரை விண்ணப்பிக்க காலநீட்டிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை

**அரசாணை (நிலை) எண். 148**

நாள்: 27.07.2026
ஸ்ரீ பராபவ வருடம், ஆடி–11,
திருவள்ளுவர் ஆண்டு 2056
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.78. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 13.10.2017.
3. அரசாணை நிலை எண்.55, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 2.5.18.
4. அரசாணை (நிலை) எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 05.02.2019,
5. அரசாணை (நிலை) எண்.16, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 25.01.2021.
6. அரசாணை (நிலை) எண்.40, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 26.02.2021.
7. அரசாணை (நிலை) எண்.118, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 04.09.2023.
8. அரசாணை (நிலை) எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 21.11.2023.
9. அரசாணை (நிலை) எண்.70. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 15.05.2025.
10. அரசாணை (நிலை) எண்.71. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 21.05.2025.
11. அரசாணை (நிலை) எண்.13. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 27.01.2026.
12. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.21601/2023/TCP 1, நாள் 19.06.2026.

------------

<u>ஆணை:</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், அரசானது, 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுமதியற்ற மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதில் குறைந்தபட்சம் ஒரு மனையாவது விற்கப்பட்டு அதற்கான விற்பனைப்பத்திரம் 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள 03.11.2017 வரை ஆறு மாத காலம் அவகாசம் வழங்கி ஆணை வெளியிட்டது.

2. மேலே இரண்டிலிருந்து ஒன்பதாவது வரை படிக்கப்பட்ட அரசாணைகளின் வழி இந்தக் கால அவகாசம் 30.06.2026 வரை நீட்டிக்கப்பட்டது.

3. மேலே பத்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் தனிமனையினை வாங்கிய பொதுமக்கள் வரன்முறைக்கு உரிய காலத்தில் விண்ணப்பிக்காமல் இருந்தாலும் அவர்கள் பயன்பெறும் வகையில், 20.10.2016-க்கு முன் பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு அத்தனிமனையினை எவ்வித காலக்கெடுவுமின்றி இணைய வழிமூலம் விண்ணப்பம் பெற்று ஏற்கனவே உள்ள விதிகளில் மாற்றமில்லாமல் வரன்முறைப்படுத்திக் கொள்ளலாம் என அரசு ஆணையிட்டுள்ளது.

4. மேலே பதினோறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்கூறிய கால அவகாசம் வழங்கப்பட்டமைக்கு, தமிழ்நாடு அங்கீகரிக்கப்படாத மனைபிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்தும் விதி 2017- இல் உரிய திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

5. மேலே பன்னிரெண்டில் படிக்கப்பட்ட நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதத்தில், மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்தினை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கு உட்பட்டு எவ்வித மாற்றமும் இன்றி இணையவழி மூலம் விண்ணப்பித்து இத்திட்டத்தில் அமையும் விற்கப்பட்ட/விற்கப்படாத அனைத்து மனைப்பிரிவுகளையும் வரன்முறைப்படுத்திக் கொள்ள மேலும் 12 மாத காலங்களுக்கு நீட்டிப்பு வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

6. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுமதியற்ற மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதில் குறைந்தபட்சம் ஒரு மனையாவது விற்கப்பட்டு அதற்கான விற்பனைப் பத்திரம் 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பத்திரப்பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனைப்பிரிவிற்கும் வரன்முறைக்கோரி விண்ணப்பிப்பதற்கான கால

அவகாசத்தை, தமிழ்நாடு அங்கீகரிக்கப்படாத மனைபிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைபடுத்தும் விதி 2017–இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கும் உட்பட்டு எவ்விதமாற்றமும் இல்லாமல் 30.06.2027 வரை கால நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடுகிறது. மேலும், இத்திட்டத்தில் இணையவழி மூலம் மட்டுமே மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த விண்ணப்பிக்க இயலும்.

7. தமிழ்நாடு அங்கீகரிக்கப்படாத மனைபிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்தும் விதி 2017–இல் இத்திட்டம் தொடர்பான உரிய திருத்தம் பின்னர் வெளியிடப்படும்.

8. இது தொடர்பாக ஒரு செய்தி வெளியீடு வெளியிடுமாறு நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். கிர்லோஷ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், (நிதி),
சென்னை–600 009.
அரசுச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை,
சென்னை–600 009.
அரசுச் செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை,
சென்னை–600 009.
அரசுச் செயலாளர், சட்டத் துறை, சென்னை–600 009.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை – 600 107.
உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை– 600 008.

<u>நகல்:</u>

மாண்புமிகு அமைச்சர் (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர்,
சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர்,
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
சென்னை – 600 009.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்
(அ.ந.மு–1/வரவு செலவு) துறை, சென்னை – 600 009.
பொதுத் (SC) துறை, சென்னை–600 009.
இருப்புகோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

**பொருள்: 3**

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான மருத்துவ காப்பீட்டு திட்டம் – 2026 கடந்த ஜூன் மாதம் முடிந்துவிட்டதினை தொடர்ந்து அரசு ஆணை எண்.122 நிதி (உடல்நலக் காப்பீடு) துறை, நாள்.24.06.2026இல் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை யுமைடெட் இந்தியா இன்ஸ்ரன்ஸ் நிறுவனம் சென்னை மூலமாக அனைத்து அலுவலர், பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு காப்பீடு திட்டத்தின் கீழ் 01.07.2026 முதல் 30.06.2031 வரை உள்ள காலத்திற்கு ரூ.12,00,000/–ஐ வரை மருத்துவ செலவீனம் மேற்கொள்ள அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், பழைய மருத்துவக் காப்பிட்டு திட்டதில் பணியாளர்களிடமிருந்து மாதம் ரூ.300/–ஐ பிடித்தம் செய்யப்பட்டு வந்தது. தற்போது புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்–2026இல் மாத சந்தா தொகை ரூ.390/–ஐ (Rs.375/– Subscription for NHIS + Rs.15/– Contribution for corpus fund) ஜூலை – 2026 ஆம் மாதத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட அரசாணையின்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஜூலை 01.07.2026ஆம் மாத ஊதியத்தில் இருந்து மாத சந்தா தொகை ரூ.390/–ஐ பிடித்தம் செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

( சி1 / 8351 / 2026 (மையம்))

**தீர்மானம் எண்.490 பொருள்: 3 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 4

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.02, வார்டு எண். 50க்குட்பட்ட பகுதிகளில் **பொதுநிதி 2025–26**ன் கீழ், கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.17/2025–26ன் வாயிலாக 16.05.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரபெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்க்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| பொது நிதி – 2025–2026 | | | |
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டுக்குழு அலுவலகம் –2, வார்டு எண் 18க்குட்பட்ட இ.பி. ரோடு ஆரம்ப சுகாதார மையம் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்<br><br>**மதிப்பீடு.ரூ.6.00 இலட்சம்**<br>**இ3/ 1236 /2026 (மையம்)** | 1. **மெசர்ஸ். ஜி. கே.கே. இன்ப்ரா அன்டு அசோசியேட்ஸ், திருச்சி.**<br>**0.05% குறைவு**<br><br>2. **மெசர்ஸ். ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ்,** திருச்சி<br>**0.94 % கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். ஜி. கே.கே. இன்ப்ரா அன்டு அசோசியேட்ஸ், திருச்சி** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

1. இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு ஆணையர் அவர்களின் தீர்மானம் நாள்.25.02.2026–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் உள்ள பணிக்கு பத்தி எண்.4ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

(இ3/ 1236 /2026 (மையம்))

**தீர்மானம் எண்.491 பொருள்: 4 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2025–26 ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 448/2025–26ன் வாயிலாக 01.06.2026 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | மண்டலம் 3, வார்டு எண்.45க்குட்பட்ட மேலகல்கண்டார் கோட்டை பகுதியல் புதிதகா கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தின் முன்புறம் பேவர் பிளாக் அமைக்கும் பணி **மதிப்பீடு ரூ.29.70 இலட்சம்** **இ7/2675/2026(மையம்)** | 1. M/s. SS சுந்தர் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி 0.03% குறைவு<br>2.மெசர்ஸ்.MM என்டர்பிரைசஸ், திருச்சி 0.59 % கூடுதல் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. SS சுந்தர் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி நிறுவனம் மதிப்பீட்டைக்காட்டிலும் 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு**: –

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு ஆணையர் அவர்களின் தீர்மானம் எண். 411 நாள்.13.03.2025ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணியினை பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/2675 /2026 (மையம்)**

**தீர்மானம் எண்.492 பொருள்: 5 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 6

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதியில் பொது நிதி 2025–26ன் கீழ், கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள பணிக்குழுவின் நிர்வாக அனுமதி நாள்.18.12.2025ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.434/2025–26ன் வாயிலாக மேற்கொள்ள 17.03.2026 அன்று பெறப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளிகள் சட்டமன்ற தேர்தல் 2026க்கான தேர்தல் நன்னடத்தை விதிகள் 15.03.2026 முதல் 07.05.2026 வரை அமுலில் இருந்த நிலையில், 01.06.2026 அன்று இப்பணிக்கு கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | கம்பரசம்பேட்டை தலைமை நீரேற்று நிலைய வளாகத்தில் கழிவறை, வால்வு தொட்டி கட்டுதல் மற்றும் வேலி அமைத்து கொடுக்கும் பணி **மதிப்பீடு ரூ.19.85 இலட்சம்** | 1. மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி –0.05% குறைவு<br>2. திரு.G.G.சக்திவேல், திருச்சி +0.33% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி** ஒப்பந்ததாரர் **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு ஆணையர் அவர்களது நிர்வாக அனுமதி நாள்.12.02.2026ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 / 17388/2025 / மையம்**

**தீர்மானம் எண்.493 பொருள்: 6 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 7

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2026–27 ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 09/2026–27ன் வாயிலாக 30.06.2026 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | மண்டலம் 5, வார்டு எண்.22ல் தில்லைநகர் பிரதான சாலையில் அமைந்துள்ள கதவு எண். A4 கொண்ட தலைமைப் பொறியாளர் குடியிருப்பில் பழுது மற்றும் பராமரிப்பு பணி<br>மதிப்பீடு ரூ.9.00 இலட்சம்<br>இ6/5361/2026 (மையம்) | 1. திரு.M. பாபுராஜ் திருச்சி<br>1.00% குறைவு<br><br>2. திரு.S,ராஜ்மோகன் திருச்சி<br>0.50% குறைவு<br><br>3, M/s. SS Infra, திருச்சி<br>தொழில்நுட்ப தகுதி பெறவில்லை<br>(30.06.2026 ம் தேதியில் பணியினை திரும்ப பெற்றுக் கொள்ளவதாக சம்மத கடிதம் வழங்கியுள்ளார்)<br><br>4. M/s. AA Infra, திருச்சி<br>தொழில்நுட்ப தகுதி பெறவில்லை<br>(30.06.2026 ம் தேதியில் பணியினை திரும்ப பெற்றுக் கொள்ளவதாக சம்மத கடிதம் வழங்கியுள்ளார்) | தொழில்நுட்ப தகுதி பெற்ற இரு ஒப்பந்தப்பள்ளிகளில் திரு.M. பாபுராஜ் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 1.00 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | மண்டலம் 5, வார்டு எண்.22ல் தில்லைநகர் பிரதான சாலையில் அமைந்துள்ள கதவு எண் A3 கொண்ட நகர்நல அலுவலர் குடியிருப்பில் பழுது மற்றும் பராமரிப்பு பணி<br>மதிப்பீடு ரூ.7.50 இலட்சம்<br>இ6/5360/2026 (மையம்) | 1. திரு.M. பாபுராஜ் திருச்சி<br>1.00% குறைவு<br>2. திரு.S,ராஜ்மோகன் திருச்சி 0.50% குறைவு<br>3, M/s. SS Infra, திருச்சி<br>தொழில்நுட்ப தகுதி பெறவில்லை<br>(30.06.2026 ம் தேதியில் பணியினை திரும்ப பெற்றுக் கொள்ளவதாக சம்மத கடிதம் வழங்கியுள்ளார்)<br>4. M/s. NS Infra Enterprises, திருச்சி<br>தொழில்நுட்ப தகுதி பெறவில்லை<br>(30.06.2026 ம் தேதியில் பணியினை திரும்ப பெற்றுக் கொள்ளவதாக சம்மத கடிதம் வழங்கியுள்ளார்) | தொழில்நுட்ப தகுதி பெற்ற இரு ஒப்பந்தப்பள்ளிகளில் திரு.M. பாபுராஜ் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 1.00 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 3 | மண்டலம் 5, வார்டு எண்.22ல் தில்லைநகர் பிரதான சாலையில் அமைந்துள்ள கதவு எண் B5 கொண்ட உதவி ஆணையர் அலவலர் குடியிருப்பில் பழுது மற்றும் பராமரிப்பு பணி<br>மதிப்பீடு ரூ.2.10 இலட்சம்<br>இ6/5362 /2026 (மையம்) | 1. திரு.M. பாபுராஜ் திருச்சி<br>1.00% குறைவு<br><br>2. திரு.S,ராஜ்மோகன் திருச்சி<br>0.50% குறைவு<br><br>3, M/s. AA Infra, திருச்சி<br>தொழில்நுட்ப தகுதி பெறவில்லை<br>(30.06.2026 ம் தேதியில் பணியினை பெற்றுக் கொள்ளவதாக சம்மத கடிதம் வழங்கியுள்ளார்) | தொழில்நுட்ப தகுதி பெற்ற இரு ஒப்பந்தப்பள்ளிகளில் திரு.M. பாபுராஜ் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 1.00 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண்.1 முதல் 3 வரை கண்டுள்ள பணிக்கு ஆணையர் அவர்களின் அனுமதி நாள். 25.05.2025ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண்.1 முதல் 3 வரை கண்டுள்ள பணிக்கு கலம் எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6 / 5361 /2026 ( மையம் )**

**தீர்மானம் எண்.494 பொருள்: 7 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 8

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மாநகர வார்டு பகுதிகளில் சேகரமாகும் தோட்டக்கழிவுகள் மற்றும் சாலையோர மழைநீர் வடிகால்களில் உள்ள மண்துகள்கள் அப்புறப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் இலகுரக டிப்பர் வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 66 எண்ணிக்கை ஓட்டுநர்களை 365 நாட்களுக்கு வெளி நிறுவனம் மூலம் தினக்கூலி முறையில் ரூ.218.10 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் பணிக்கு மாமன்ற தீர்மானம் எண்.113, நாள்:30.01.2026ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்,404/2025–26, வ.எண்.2ன் வாயிலாக 27.02.2026ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் தகுதி பெற்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Name of work | Qty | Estimate | | M/s. TDMS & Co, Trichy | |
|---|---|---|---|---|---|
| | | Rate | Amount | Rate | Amount |
| திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மாநகர வார்டு பகுதிகளில் சேகரமாகும் தோட்டக்கழிவுகள் மற்றும் சாலையோர மழைநீர் வடிகால்களில் உள்ள மண்துகள்கள் அப்புறப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் இலகுரக டிப்பர் வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 66 ஓட்டுநர்களை 365 நாட்களுக்கு வெளிநிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் பணி (EPF 13% மற்றும் சேவை கட்டணம் 5% உட்பட) | 66 Nos x 365 Days | 905 | 21801450 | 896 | 21584640 |
| **Total** | | 21801450 | | **21584640 (-0.99%)Less** | |
| **EMD ( Rs.** 219000 /-) | | | | eProcurment Ref. No.7928931631013, Rs.219000/- | |
| **After Negotiation** | | | | | |
| | 66 Nos x 365 Days | 905 | 21801450 | 891 | 21464190 |
| **Total** | | 21801450 | | **21464190 (-1.55%)Less** | |

மேற்கண்ட விபரப்படி **M/s. TDMS & Co, Trichy நிறுவனத்தாரின்** திருத்திய ஒப்பந்தப்புள்ளி விலை **குறைப்பு சம்மத கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை ரூ.2,14,64,190/-** மதிப்பீட்டு தொகை ரூ.2,18,01,450/-ஐ காட்டிலும் -1.55% குறைவாக உள்ளதை கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது,

**அலுவலகக் குறிப்பு:**

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மாநகர வார்டு பகுதிகளில் சேகரமாகும் தோட்டக்கழிவுகள் மற்றும் சாலையோர மழைநீர் வடிகால்களில் உள்ள மண்துகள்கள் அப்புறப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் இலகுரக டிப்பர் வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 66 எண்ணிக்கை ஓட்டுநர்களை 365 நாட்களுக்கு வெளி நிறுவனம் மூலம் தினக்கூலி முறையில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி மதிப்பீட்டை காட்டிலும் -1.55% குறைவாக வழங்கியுள்ள M/s. TDMS & Co, Trichy நிறுவனத்தாரின் திருத்திய ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ.2,14,64,190/-செலவில் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2026-27ம் ஆண்டு வருவாய் நிதி செலவினங்கள் திடக்கழிவு மேலாண்மை கணக்கு தலைப்பு எண்.2305111ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.120.00 கோடியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

16718/2025/இ5(மையம்)

**தீர்மானம் எண்.495 பொருள்: 8 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 9

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு எண். 3, பிரிவு 4-க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 10 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள ரூ. 44.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு (EPF நீங்கலாக) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 28.02.2023 அன்று முதல் மெர்சஸ். A S பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தார் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் எதிர்வரும் 28.02.2026 உடன் பணி நிறைவடைந்தது. மேலும், இப்பணியினை மேற்கொள்ள புதிதாக கோப்புகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி நடவடிக்கையில் உள்ளது.

சட்டமன்ற தேர்தல் 2026 நன்னடத்தை விதிகள் அறிவிக்கப்பட்டதால் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி 01.03.2026 முதல் 30.09.2026 வரை காலநீட்டிப்பு செய்து, மேற்கண்ட 10 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணிகளை மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.4,08,661/- வீதம் 7 மாதங்களுக்கு செலவினம் ரூ. 28,60,627/-ஐ மேற்கொள்ளவும், அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மெர்சஸ். A S பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தார் வார்டு குழு எண். 3, பிரிவு 4-க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 10 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்த தொகை ரூ. 4,08,661/- **வீதம் 7 மாதங்களுக்கு (01.03.2026 முதல் 30.09.2026 வரை) ஏற்படும் செலவினம் ரூ. 28,60,627/-**ஐ மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையினை 2026-27ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (2305009) **குடிநீர் வழங்கும் பணிகள் - பராமரிப்பு செலவினங்கள்** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 2000.00 இலட்சத்திலிருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

இ4/14009/2022/மையம்

**தீர்மானம் எண்.496 பொருள்: 9 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 10

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு எண். 5, பிரிவு 1 முதல் 4–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 20 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள ரூ. 70.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு (EPF நீங்கலாக) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 30.09.2022 அன்று முதல் மெர்சஸ். A S பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தார் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் எதிர்வரும் 31.03.2026 உடன் பணி நிறைவடைந்தது. மேலும், இப்பணியினை மேற்கொள்ள புதிதாக கோப்புகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி நடவடிக்கையில் உள்ளது.

சட்டமன்ற தேர்தல் 2026 நன்னடத்தை விதிகள் அறிவிக்கப்பட்டதால் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2026 முதல் 30.09.2026 வரை காலநீட்டிப்பு செய்து, மேற்கண்ட 20 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணிகளை மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ. 7,89,930/– வீதம் 6 மாதங்களுக்கு செலவினம் ரூ. 47,39,580/–ஐ மேற்கொள்ளவும், அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மெர்சஸ். A S பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தார் வார்டு குழு எண். 5, பிரிவு 1 முதல் 4–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 20 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்த தொகை ரூ. 7,89,930/– **வீதம் 6 மாதங்களுக்கு** (01.04.2026 **முதல்** 30.09.2026 வரை) **ஏற்படும் செலவினம்** ரூ. 47,39,580/–ஐ மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையினை 2026–27ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (2305009) **குடிநீர் வழங்கும் பணிகள் – பராமரிப்பு செலவினங்கள்** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 2000.00 இலட்சத்திலிருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/9434/2022/மையம்**

**தீர்மானம் எண்.497 பொருள்: 10 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 11

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு எண். 4, பிரிவு 1 மற்றும் 2–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 12 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள ரூ. 42.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு (EPF நீங்கலாக) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 28.02.2023 அன்று முதல் மெர்சஸ். A S பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தார் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் எதிர்வரும் 28.02.2026 உடன் பணி நிறைவடைந்தது. மேலும், இப்பணியினை மேற்கொள்ள புதிதாக கோப்புகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி நடவடிக்கையில் உள்ளது.

சட்டமன்ற தேர்தல் 2026 நன்னடத்தை விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி 01.03.2026 முதல் 30.09.2026 வரை காலநீட்டிப்பு செய்து, மேற்கண்ட 12 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணிகளை மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ. 3,91,850/– வீதம் 7 மாதங்களுக்கு செலவினம் ரூ. 27,42,950/–ஐ மேற்கொள்ளவும், அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மெர்சஸ். A S பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தார் வார்டு குழு எண். 4, பிரிவு 1 மற்றும் 2–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 12 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்த தொகை ரூ. 3,91,850/– **வீதம் 7 மாதங்களுக்கு** (01.03.2026 **முதல்** 30.09.2026 வரை) **ஏற்படும் செலவினம் ரூ.** 27,42,950/–ஐ மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையினை 2026–27ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (2305009) **குடிநீர் வழங்கும் பணிகள் – பராமரிப்பு செலவினங்கள்** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 2000.00 இலட்சத்திலிருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/14007/2022/மையம்**

**தீர்மானம் எண்.498 பொருள்: 11 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 12**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு எண். 1, பிரிவு 1 மற்றும் 2–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 8 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள ரூ. 45.40 இலட்சம் மதிப்பீட்டிற்கு (EPF நீங்கலாக) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 31.03.2023 அன்று முதல் மெர்சஸ். A S பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தார் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் எதிர்வரும் 31.03.2026 உடன் பணி நிறைவடைந்தது. மேலும், இப்பணியினை மேற்கொள்ள புதிதாக கோப்புகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் பணி நடவடிக்கையில் உள்ளது.

சட்டமன்ற தேர்தல் 2026 நன்னடத்தை விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2026 முதல் 30.09.2026 வரை காலநீட்டிப்பு செய்து, மேற்கண்ட 8 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணிகளை மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ. 5,03,611/– வீதம் 6 மாதங்களுக்கு செலவினம் ரூ. 30,21,666/–ஐ மேற்கொள்ளவும், அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மெர்சஸ். A S பவர் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தார் வார்டு குழு எண். 1, பிரிவு 1 மற்றும் 2–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 8 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்த தொகை
   ரூ. 5,03,611/– **வீதம் 6 மாதங்களுக்கு (01.04.2026 முதல் 30.09.2026 வரை) ஏற்படும் செலவினம் ரூ. 30,21,666/–**ஐ மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையினை 2026–27ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (2305009) **குடிநீர் வழங்கும் பணிகள் – பராமரிப்பு செலவினங்கள்** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 2000.00 இலட்சத்திலிருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/15493/2022/மையம்**

**தீர்மானம் எண்.499 பொருள்: 12 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 13**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–1. பிரிவு எண் : 1க்குட்பட்ட வார்டு எண்.03 சர்வே வார்டு –B. பிளாக் –16, நகரளவை எண் ; 717க்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்போது ரூ.11.10 கோடி மதிப்பீட்டில் புதியதாக ஸ்ரீரங்கம் பேருந்து நிலையம் கட்டப்பட்டு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. மேற்படி பேருந்து நிலையத்திற்கு வரும் இருசக்கர வாகனங்கள் நிறுத்த போதிய இடவசதி இல்லை. எனவே மேற்படி பேருந்து நிலையம் அருகில் உள்ள அலுவலகத்திற்கு பின்புறம் உள்ள இடத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் தற்போது பழைய உபயோகத்தில் இல்லாத ஜெனரேட்டர் அறை, உபயோகத்தில் இல்லாத பழுதடைந்த படிப்பக கட்டிடம் மற்றும் கழிவறை கட்டிடங்கள் ஆகிய கட்டிடங்களை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனவே மேற்படி பேருந்து நிலையத்திற்கு இரு சக்கர வாகன நிறுத்துமிடம் அமைக்க வேண்டிய அவசியம் உள்ளதால், மேற்படி இடத்தில் உள்ள பழைய கட்டிங்களை இடித்து அப்புறப்படுத்த அனுமதி வேண்டி பொருள் ஏற்புக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

1. ஸ்ரீரங்கம் பேருந்து நிலையத்திற்கு இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் அமைக்கவும், அதில் உள்ள பழைய கட்டிடங்களை அகற்றவும் அனுமதிக்கலாம்.
2. ஜெனரேட்டர் அறையினை மாற்றியமைக்க அனுமதிக்கலாம்.

**இ8/10198/2023(மையம்)**

**தீர்மானம் எண்.500 பொருள்: 13 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 14**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், KfW உதவி SMIF–TN–III நிதி, மூலதன மான்ய நிதி மற்றும் மாநகராட்சி நிதி 2025–26 ஆகியவற்றின் கீழ், வார்டு எண்.7 மற்றும் 15க்குட்பட்ட பகுதிகளில் செல்லும் காவேரி ஆற்றின் வடக்கு மற்றும் தெற்கு கரையோர முகப்பு பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை ரூ.50.47 கோடி மதிப்பீட்டிலும், வார்டு எண் – 61க்குட்பட்ட கொட்டப்பட்டு ஏரியில் மேம்பாட்டு பணிகளை ரூ.31.31 கோடி மதிப்பீட்டிலும், அட்டவணையில் பத்தி எண். 3 மற்றும் 4ல் குறிப்பிட்டுள்ள நிதியாதாரங்களின்படி மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (நிலை) எண்.20, நாள்.04.02.2026ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| Sl.No | Details | River Front Development | Kottapattu Lake |
|---|---|---|---|
| | | Rs. in Crore | |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | KfW assisted SMIF–TN–III – Loan | 17.66 | 10.96 |
| 2 | KfW assisted SMIF–TN–III – Grant | 17.66 | 10.96 |
| 3 | Capital Grant Fund | 7.57 | 4.69 |
| 4 | ULB Share | 7.58 | 4.70 |
| | **Total** | **50.47** | **31.31** |

அதனைத் தொடர்ந்து வரப்பெற்ற தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் கழக (TNUIFSL) நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்களின் 08.05.2026ம் தேதிய **கடன் அனுமதி** கடிதங்களில் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை ஏற்பது குறித்து மாமன்ற தீர்மானம் பெற்று அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :**

1. தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் கழகம், சென்னை மூலமாக ஜெர்மான்ய வங்கி (KfW) நிதியுதவியின் கீழ், வார்டு எண்.7 மற்றும் 15க்குட்பட்ட பகுதிகளில் செல்லும் காவேரி ஆற்றின் வடக்கு மற்றும் தெற்கு கரையோர முகப்பு பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை ரூ.50.47 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக **கடன் நிதியுதவி** ரூ.17.66 கோடி பெறுவதற்கு, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் கழகம், கடிதம் எண் TNUDF/Projects/ SMIF–TN–III/Trichy RFD, நாள். 08.05.2026ல் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
2. தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் கழகம், சென்னை மூலமாக ஜெர்மான்ய வங்கி (KfW) நிதியுதவியின் கீழ், வார்டு எண் – 61க்குட்பட்ட கொட்டப்பட்டு ஏரியில் மேம்பாட்டு பணிகளை ரூ.31.31 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக **கடன் நிதியுதவி** ரூ.10.96 கோடி பெறுவதற்கு, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் கழகம், கடிதம் எண் TNUDF/Projects/ SMIF–TN–III/Trichy Lake, நாள். 08.05.2026ல் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3. மேற்படி திட்டங்களை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்படவிருக்கும் அனைத்து ஒப்பந்த பத்திரத்திலும் மாநகராட்சி ஆணையர் ஒப்பம் செய்வதற்கான முழு உரிமை வழங்கிட மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ8/815/2026(மையம்)

**தீர்மானம் எண்.501 பொருள்: 14 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

TNUDF
TAMIL NADU URBAN DEVELOPMENT FUND

**LOAN SANCTION LETTER**

TNUDF/Projects/SMIF-TN-III/Trichy Lake May 08, 2026

The Commissioner
Tiruchirappalli City Corporation
Tiruchirappalli – 620 001.

Sir,

**Sub: TNUDF - KfW assisted SMIF-TN-III / Sanction of loan for improvements to Kottapattu Periyakulam Lake in Tiruchirappalli City Municipal Corporation - Reg.**

**Ref: 1. G.O.(Ms) No.20 Municipal Administration & Water Supply (MA 2) Department dated 04.02.2026**

**2. Your Loan Application dated 09.03.2026**

With reference to your Loan Application cited and further discussions with you, we are agreeable to provide financial assistance in the form of term loan to Tiruchirappalli City Municipal Corporation for improvements to Kottapattu Periyakulam Lake in Tiruchirappalli City Municipal Corporation subject to the following Terms and Conditions:

1) **Amount of Loan** : Rs.10.96 crores (Rupees Ten Crores and Ninety Six Lakhs only)

2) **Project** : Improvements to Kottapattu Periyakulam Lake in Tiruchirappalli City Municipal Corporation

3) **Project Cost** : Rs.31.31 crores

4) **Rate of Interest** : 8.00 % per annum

5) **Principal Moratorium** : 2 years

6) **Repayment Period** : 10 years

7) **Financing Plan** :

| Sl.No | Details | Amount (Rs. in crore) | Percentage |
|---|---|---|---|
| 1. | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under KfW assisted SMIF-TN-III | 10.96 | 35.00% |
| 2. | Grant from Project Sustainability Grant Fund under KfW assisted SMIF-TN-III | 10.96 | 35.00% |
| 3. | Grant from CGF | 4.69 | 15.00% |
| 4. | ULB Contribution | 4.70 | 15.00% |
| | **Total** | **31.31** | **100.00%** |

Fund Manager of TNUDF
**TAMIL NADU URBAN INFRASTRUCTURE FINANCIAL SERVICES LIMITED**
TNUIFSL Towers, 2nd Floor, Block H1, 3rd Avenue, Anna Nagar East, Chennai - 600 102.
Ph : 044-24643104 | 24643107 | website : www.tnuifsl.com

TNUDF
TAMIL NADU URBAN DEVELOPMENT FUND

8) **Completion Period:**

The proposed Project should be completed within two years from the date of commencement of the project.

9) **Last date of withdrawal:**

Unless TNUIFSL agrees in writing, the right to make withdrawals from the Loan shall cease on completion of three years from the date of execution of the Loan Agreement.

10) **Special terms & conditions:**

a) **Procurement Guidelines:**
The Corporation shall follow Tamil Nadu Transparency in Tenders Act, 1998 (As amended from time to time) for selection of contractors and execution of works. The Corporation shall undertake the selection of contractors only after TNUIFSL approves the selection procedure.

b) The Corporation shall open a separate "Project Account" for the sub-project assisted under SMIF-TN-III in the Books of Accounts of the Corporation.

c) The Corporation shall maintain all the Receipt and Payment vouchers (along with supporting documents) pertaining to the sub-project assisted under SMIF-TN-III separately. Bank pass sheets (duly certified by the Bank) for the Bank account have to be obtained periodically (monthly/quarterly) by the Corporation and maintained separately. The Corporation shall close the Project Accounts on 31st March every year. The first year Project Accounts shall be closed on 31st March 2027. The Corporation shall produce Project Accounts, Bank Account and other transaction to the Auditor appointed by TNUIFSL for auditing of the sub-project accounts and for preparation of Project Audit Report.

d) **Operation & Maintenance:**

The Corporation shall operate and maintain the Project assets in a good working condition and meet the operation & maintenance charges from the user charges collected from the beneficiaries.

e) **Loan from others:**

The Corporation shall not avail any fresh loans from banks, institutions or any other agency during the tenure of TNUDF's Loan without obtaining prior written approval from TNUIFSL.

f) **Environmental, Climate Change & Social Management Framework:**

The Corporation shall implement the Project according to the Environmental, Climate Change and Social Management Framework (ECSMF) developed by TNUIFSL.

g) **Debt Service Payment:**

The Corporation shall honour the debt service payment on the respective due date prescribed by TNUDF. If the Corporation fails to honour the debt service on the respective due date, the same shall be recovered from the State Finance Commission Devolution grant through Director of Municipal Administration.

11) The Corporation shall place the terms and conditions of Term Loan Sanction before the Council for acceptance and forward a certified copy of the resolution passed by the Council.

12) The Corporation shall enter into the following before availing the Term Loan.

i) Term Loan Agreement (Draft Loan Agreement describing the detailed terms and conditions of the Loan is enclosed as Annexure – 1)

ii) Tripartite Agreement for operation of Designated Project Account (Draft Tripartite Agreement is enclosed as Annexure – 2).

TNUDF
TAMILNADU URBAN DEVELOPMENT FUND

13) This sanction should not be construed as giving rise to any binding obligation on the part of TNUDF unless, the Corporation completes the loan documentation within 90 days from the date of receipt of this letter or such further time as may be allowed by TNUDF in its sole discretion.

Kindly acknowledge the receipt of this Loan Sanction letter.

Yours faithfully,

for Chairman and
Managing Director

Encl.: As above

CC:
The Director of Municipal Administration
Urban Administrative Building, 11th floor
75, Santhome High Road
MRC Nagar, R.A.Puram
Chennai- 600 028.

Fund Manager of TNUDF
TAMILNADU URBAN INFRASTRUCTURE FINANCIAL SERVICES LIMITED
Regd. Office : TNUIFSL Towers, 2nd Floor, Block H1, 3rd Avenue, Anna Nagar East, Chennai - 600 102.
Ph : 044-24643104 | 24643107 | website : www.tnuifsl.com

TNUDF
TAMIL NADU URBAN DEVELOPMENT FUND

**LOAN SANCTION LETTER**

TNUDF/Projects/SMIF-TN-III/Trichy RFD May 08, 2026

The Commissioner
Tiruchirappalli City Corporation
Tiruchirappalli – 620 001.

Sir,

**Sub: TNUDF - KfW assisted SMIF-TN-III / Sanction of loan for River front Development along the banks of River Cauvery in Tiruchirappalli City Municipal Corporation - Reg.**

**Ref: 1. G.O.(Ms) No.20 Municipal Administration & Water Supply (MA 2) Department dated 04.02.2026**
**2. Your Loan Application dated 09.03.2026**

With reference to your Loan Application cited and further discussions with you, we are agreeable to provide financial assistance in the form of term loan to Tiruchirappalli City Municipal Corporation for River front Development along the banks of River Cauvery in Tiruchirappalli City Municipal Corporation subject to the following Terms and Conditions:

1) **Amount of Loan** : Rs.17.66 crores (Rupees Seventeen Crores and Sixty Six Lakhs only)
2) **Project** : River front Development along the banks of River Cauvery in Tiruchirappalli City Municipal Corporation
3) **Project Cost** : Rs.50.47 crores
4) **Rate of Interest** : 8.00 % per annum
5) **Principal Moratorium** : 2 years
6) **Repayment Period** : 10 years
7) **Financing Plan** :

| Sl.No | Details | Amount (Rs. in crore) | Percentage |
|---|---|---|---|
| 1. | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under KfW assisted SMIF-TN-III | 17.66 | 35.00% |
| 2. | Grant from Project Sustainability Grant Fund under KfW assisted SMIF-TN-III | 17.66 | 35.00% |
| 3. | Grant from CGF | 7.57 | 15.00% |
| 4. | ULB Contribution | 7.58 | 15.00% |
| | **Total** | **50.47** | **100.00%** |

Fund Manager of TNUDF
**TAMIL NADU URBAN INFRASTRUCTURE FINANCIAL SERVICES LIMITED**
TNUIFSL Towers, 2nd Floor, Block H1, 3rd Avenue, Anna Nagar East, Chennai - 600 102.
Ph : 044-24643104 | 24643107 | website : www.tnuifsl.com

8) **Completion Period:**

The proposed Project should be completed within two years from the date of commencement of the project.

9) **Last date of withdrawal:**

Unless TNUIFSL agrees in writing, the right to make withdrawals from the Loan shall cease on completion of three years from the date of execution of the Loan Agreement.

10) **Special terms & conditions:**

a) **Procurement Guidelines:**
The Corporation shall follow Tamil Nadu Transparency in Tenders Act, 1998 (As amended from time to time) for selection of contractors and execution of works. The Corporation shall undertake the selection of contractors only after TNUIFSL approves the selection procedure.

b) The Corporation shall open a separate "Project Account" for the sub-project assisted under SMIF-TN-III in the Books of Accounts of the Corporation.

c) The Corporation shall maintain all the Receipt and Payment vouchers (along with supporting documents) pertaining to the sub-project assisted under SMIF-TN-III separately. Bank pass sheets (duly certified by the Bank) for the Bank account have to be obtained periodically (monthly/quarterly) by the Corporation and maintained separately. The Corporation shall close the Project Accounts on 31st March every year. The first year Project Accounts shall be closed on 31st March 2027. The Corporation shall produce Project Accounts, Bank Account and other transaction to the Auditor appointed by TNUIFSL for auditing of the sub-project accounts and for preparation of Project Audit Report.

d) **Operation & Maintenance:**

The Corporation shall operate and maintain the Project assets in a good working condition and meet the operation & maintenance charges from the user charges collected from the beneficiaries.

e) **Loan from others:**

The Corporation shall not avail any fresh loans from banks, institutions or any other agency during the tenure of TNUDF's Loan without obtaining prior written approval from TNUIFSL.

f) **Environmental, Climate Change & Social Management Framework:**

The Corporation shall implement the Project according to the Environmental, Climate Change and Social Management Framework (ECSMF) developed by TNUIFSL.

g) **Debt Service Payment:**

The Corporation shall honour the debt service payment on the respective due date prescribed by TNUDF. If the Corporation fails to honour the debt service on the respective due date, the same shall be recovered from the State Finance Commission Devolution grant through Director of Municipal Administration.

11) The Corporation shall place the terms and conditions of Term Loan Sanction before the Council for acceptance and forward a certified copy of the resolution passed by the Council.

12) The Corporation shall enter into the following before availing the Term Loan.

i) Term Loan Agreement (Draft Loan Agreement describing the detailed terms and conditions of the Loan is enclosed as Annexure – 1)

ii) Tripartite Agreement for operation of Designated Project Account (Draft Tripartite Agreement is enclosed as Annexure – 2).

TNUDF
TAMILNADU URBAN DEVELOPMENT FUND

13) This sanction should not be construed as giving rise to any binding obligation on the part of TNUDF unless, the Corporation completes the loan documentation within 90 days from the date of receipt of this letter or such further time as may be allowed by TNUDF in its sole discretion.

Kindly acknowledge the receipt of this Loan Sanction letter.

Yours faithfully,

D. Rajdev
8/5/26
for Chairman and
Managing Director

Encl.: As above

CC:
The Director of Municipal Administration
Urban Administrative Building, 11th floor
75, Santhome High Road
MRC Nagar, R.A.Puram
Chennai- 600 028.

**பொருள்: 15**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், KfW உதவி SMIF-TN-III நிதி, மூலதன மான்ய நிதி மற்றும் மாநகராட்சி நிதி 2025-26 ஆகியவற்றின் கீழ், வார்டு எண்.7 மற்றும் 15க்குட்பட்ட பகுதிகளில் செல்லும் காவேரி ஆற்றின் வடக்கு மற்றும் தெற்கு கரையோர முகப்பு பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை ரூ.50.47 கோடி மதிப்பீட்டிலும், வார்டு எண் - 61க்குட்பட்ட கொட்டப்பட்டு ஏரியில் மேம்பாட்டு பணிகளை ரூ.31.31 கோடி மதிப்பீட்டிலும், அட்டவணையில் பத்தி எண். 3 மற்றும் 4ல் குறிப்பிட்டுள்ள நிதியாதாரங்களின்படி மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (நிலை) எண்.20, நாள்.04.02.2026ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| Sl.No | Details | River Front Development | Kottapattu Lake |
|---|---|---|---|
| | | Rs. in Crore | |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | KfW assisted SMIF-TN-III - Loan | 17.66 | 10.96 |
| 2 | KfW assisted SMIF-TN-III - Grant | 17.66 | 10.96 |
| 3 | Capital Grant Fund | 7.57 | 4.69 |
| 4 | ULB Share | 7.58 | 4.70 |
| | **Total** | **50.47** | **31.31** |

அதனைத் தொடர்ந்து வரப்பெற்ற தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் கழக (TNUIFSL) நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்களின் 08.05.2026ம் தேதிய **மான்ய ஒப்புதல்** கடிதங்களில் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை ஏற்பது குறித்து மாமன்ற தீர்மானம் பெற்று அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1. தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் கழகம், சென்னை மூலமாக ஜெர்மான்ய வங்கி (KfW) நிதியுதவியின் கீழ், வார்டு எண்.7 மற்றும் 15க்குட்பட்ட பகுதிகளில் செல்லும் காவேரி ஆற்றின் வடக்கு மற்றும் தெற்கு கரையோர முகப்பு பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை ரூ.50.47 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக **மான்ய நிதியுதவி** ரூ.17.66 கோடி பெறுவதற்கு, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் கழகம், கடிதம் எண் TNUDF/Projects/ SMIF-TN-III/Trichy RFD, நாள். 08.05.2026ல் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
2. தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் கழகம், சென்னை மூலமாக ஜெர்மான்ய வங்கி (KfW) நிதியுதவியின் கீழ், வார்டு எண் - 61க்குட்பட்ட கொட்டப்பட்டு ஏரியில் மேம்பாட்டு பணிகளை ரூ.31.31 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக **மான்ய நிதியுதவி** ரூ.10.96 கோடி பெறுவதற்கு, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் கழகம், கடிதம் எண் TNUDF/Projects/ SMIF-TN-III/Trichy Lake, நாள். 08.05.2026ல் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3. மேற்படி திட்டங்களை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்படவிருக்கும் அனைத்து ஒப்பந்த பத்திரத்திலும் மாநகராட்சி ஆணையர் ஒப்பம் செய்வதற்கான முழு உரிமை வழங்கிட மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ8/815/2026(மையம்)

**தீர்மானம் எண்.502 பொருள்: 15 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

PSGF
GRANT FUND OF GOVERNMENT OF TAMIL NADU

## GRANT SANCTION LETTER

TNUDF/Projects/SMIF-TN-III/Trichy Lake May 08, 2026

The Commissioner
Tiruchirappalli Corporation
Tiruchirappalli – 620 001.

Sir,

**Sub: KfW assisted SMIF-TN-III / Sanction of Grant for improvements to Kottapattu Periyakulam Lake in Tiruchirappalli City Municipal Corporation - Reg.**

**Ref: 1. G.O.(Ms) No.20 Municipal Administration & Water Supply (MA 2) Department dated 04.02.2026**
**2. Your Grant Application dated 09.03.2026**

With reference to your Grant Application cited and as per the Orders of the Government cited, we are agreeable to provide financial assistance in the form of Grant to Tiruchirappalli City Municipal Corporation for improvements to Kottapattu Periyakulam Lake in Tiruchirappalli City Municipal Corporation subject to the following Terms and Conditions:

1) **Amount of Grant** : Rs.10.96 crores (Rupees Ten Crores and Ninety Six Lakhs only)

2) **Project** : Improvements to Kottapattu Periyakulam Lake in Tiruchirappalli City Municipal Corporation

3) **Project Cost** : Rs.31.31 crores

4) **Financing Plan** :

| Sl.No | Details | Amount (Rs. in crore) | Percentage |
|---|---|---|---|
| 1. | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under KfW assisted SMIF-TN-III | 10.96 | 35.00% |
| 2. | Grant from Project Sustainability Grant Fund under KfW assisted SMIF-TN-III | 10.96 | 35.00% |
| 3. | Grant from CGF | 4.69 | 15.00% |
| 4. | ULB Contribution | 4.70 | 15.00% |
| | **Total** | **31.31** | **100.00%** |

PSGF
GRANT FUND OF GOVERNMENT OF TAMIL NADU

5) **Completion Period:**

The proposed Project should be completed within two years from the date of commencement of project.

6) **Last date of withdrawal:**

Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the Grant shall cease on completion of three years from the date of acceptance of Grant terms & conditions.

7) **Special terms & conditions:**

a) **Procurement Guidelines:**

The Corporation shall follow Tamil Nadu Transparency in Tenders Act, 1998 (As amended from time to time) for selection of contractors and execution of works. The Corporation shall undertake the selection of contractors only after TNUIFSL approves the selection procedure.

b) The Corporation shall open a separate "Project Account" for the sub-project assisted under SMIF-TN-III in the Books of Accounts of the Corporation.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு எண் 28க்குட்பட்ட அண்ணாநகர் சிவபிரகாசம் சாலையில் ராஜாஜி பள்ளி அருகில் வாமடம் செல்லக்கூடிய புதைவடிகால் உந்து மெயின் குழாயில் உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலைகளில் வழிந்தோடுகிறது. இதனால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட உடைப்பினை சரிசெய்யும் பணியினை மேற்கொள்ள ரூ.3.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மதிப்பீட்டு விலையை காட்டிலும் **0.04%** குறைவான விலை வீதத்தில் மேற்படி பணியினை செய்து தர சம்மதம் தெரிவித்த. **M/s. KVS Electricals, திருச்சி** ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ்பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/827/2026 (மையம்)**

**தீர்மானம் எண்.527 பொருள்: 40 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 41**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. வார்டுக் குழு அலுவலகம்–II வார்டு எண் 18க்குட்பட்ட காந்தி மார்க்கெட் பகுதியில் அலுவலக கட்டிடத்தில் உள்ள ஒலி அலாரம் தினமும் மூன்று முறை ஒலி எழுப்பு காந்தி மார்க்கெட் வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் நேரத்தை கணிக்கும் விதமாக செயல்பட்டு வந்த ஒலி அமைப்பானது தற்போது ஏற்பட்டு பழுது இயங்காமல் இருப்பதால் வணிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நேரத்தை அறிய சிரமப்பட்டு வருவதனால் மேற்கண்ட ஒலி அமைப்பினை சீர் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1.20/– இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு. இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08% குறைந்த விலைப்பு உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த மெசர்ஸ். KVS Electrical திருச்சி ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ3/2679/2026

**தீர்மானம் எண்.528 பொருள்: 41 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 42

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 5, வார்டு எண் 26க்குட்பட்ட வயலூர் மெயின் ரோட்டில் உள்ள புதைவடிகால் உந்து நிலையத்திலிருந்து ஒத்தக்கடை புதைவடிகால் உந்து நிலையத்திற்கு உந்தப்படுகிறது. தற்போது வயலூர் மெயின்ரோட்டில் பிஷப் ஹூபர் கல்லூரியின் நுழைவுவாயில் திடக்கழிவு நீர் குழாயில் கசிவுகள் ஏற்படுவதால் கல்லூரி மாணவ மாணவியர்கள் அதனை கடந்து செல்கின்றனர் மேலும் இவ்விடமானது அதிக நெரிசலாகவும், மற்றும் போக்குவரத்து அதிக அளவில் உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கு மிகவும் இடையூறாகவும் சுகாதார கேடு ஏற்படுத்துவதினை தவிர்க்கும் பொருட்டு இப்பணியின் அவசர அவசியம் கருதீ மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மதிப்பீட்டு விலையை காட்டிலும் **0.15 %** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த, **M/s. KVS Electricals**, திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ்பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/1687/2026 (மையம்)**

**தீர்மானம் எண்.529 பொருள்: 42 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 43

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு எண் 28க்குட்பட்ட தென்னூர் சேவை சாலையில் மகாத்மா காந்தி பள்ளி அருகில் செல்லக்கூடிய புதைவடிகால் மெயின் குழாயில் உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலைகளில் வழிந்தோடுகிறது. இதனால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட உடைப்பினை சரிசெய்யும் பணியினை மேற்கொள்ள ரூ.7.95 இலட்சத்திற்கு மதிப்பீடு யாரிக்கப்பட்டு, மதிப்பீட்டு விலையை காட்டிலும் **0.04%** குறைவான விலை வீதத்தில் மேற்படி பணியினை செய்து தர சம்மதம் தெரிவித்த **M/s. Power Electrical Works, திருச்சி** ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ்பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/3032/2026 (மையம்)**

**தீர்மானம் எண்.530 பொருள்: 43 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 44

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுக்குழு அலுவலகம் II வார்டு எண். 30க்குட்பட்ட மதுரை ரோடு பகுதியில் மைய சமையல் கூடத்தில் பழுது அடைந்த ஆழ்துளை கிணறு மோட்டார் விளக்கு (LED) மாற்றி அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.1.21 இலட்சத்திற்கு ஒப்பந்தப்பத்திரம் நிறைவேற்றப்பட்டு இப் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7)கீழ் மதிப்பீட்டை காட்டிலும் 0.04% குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த திரு. R.ராமதாஸ் திருச்சி ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

இ3/7110/2026(மையம்)

**தீர்மானம் எண்.531 பொருள்: 44 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 45

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 3, வார்டு எண்.43க்குட்பட்ட காவேரி நகர் பகுதியில் உள்ள புதைவடிகால் பிரதாக குழாயில் பழுது ஏற்பட்டுள்ளதால் அவசர அவசியம் கருதி புதைவடிகால் பிரதான குழாயினை சீர்செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக்காட்டிலும் 0.12 % குறைந்த விலைப்புள்ளியில் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த M/s. AK கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/4384 /2026 (மையம்)

**தீர்மானம் எண்.532 பொருள்: 45 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 46

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 3, வார்டு எண்.43க்குட்பட்ட காவேரி நகர், பிலோமினாள்புரம், பிள்ளையார் கோயில் தெரு, குறிஞ்சி நகர், பர்மா காலனி,காந்தி சிலை, மலையப்பா நகர் வரையிலும் சுமார் 8623 குடியிருப்புகளுக்கு அம்ரூத் திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடை திட்ட பணிக்காக 19.20 கி.மீ கழிவுநீர் குழாய்களும் மற்றும் 472 எண்ணிக்கை ஆழ்நுழைவு தொட்டிகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்காக தோண்டப்பட்ட பள்ளங்களினால், ஏற்பட்ட மண்துகள்கள் மற்றும் பருவ கால மழையினால், ஆழ்நுழைவு தொட்டிகளில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றினால் மட்டுமே வீட்டு இணைப்புகள் வழங்க இயலும். எனவே, மேற்குறிப்பிட்டுள்ள ஆழ்நுழைவுத் தொட்டிகளில் உள்ள மழைநீரை மின்மோட்டார் வைத்து உறிஞ்சி வெளியேற்றவும், மண் நுண் துகள்களை அகற்றி சுத்தம் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக்காட்டிலும் 0.06 % குறைந்த விலைப்புள்ளியில் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த M/s. AKRN கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/16897 /2025 (மையம்)

**தீர்மானம் எண்.533 பொருள்: 46 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 47

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 3, வார்டு எண்.38க்குட்பட்ட காமாராஜ் நகர், அண்ணா நகர், வேணுகோபால் தெர, பாரி நகர், திரு நகர், பரத் அவென்யூ, வடக்கு பிள்ளையார் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் சுமார் 6239 குடியிருப்புகளுக்கு அம்ரூத் திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடை திட்ட பணிக்காக 28.42 கி.மீ கழிவுநீர் குழாய்களும் மற்றும் 622 எண்ணிக்கை ஆழ்நுழைவு தொட்டிகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்காக தோண்டப்பட்ட பள்ளங்களினால், ஏற்பட்ட மண்துகள்கள் மற்றும் பருவ கால மழையினால், ஆழ்நுழைவு தொட்டிகளில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றினால் மட்டுமே வீட்டு இணைப்புகள் வழங்க இயலும். எனவே, மேற்குறிப்பிட்டுள்ள ஆழ்நுழைவுத் தொட்டிகளில் உள்ள மழைநீரை மின்மோட்டார் வைத்து உறிஞ்சி வெளியேற்றவும், மண் நுண் துகள்களை அகற்றி சுத்தம் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக்காட்டிலும் 0.07 % குறைந்த விலைப்புள்ளியில் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த M/s. AKRN கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/16895 /2025 (மையம்)

**தீர்மானம் எண்.534 பொருள்: 47 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 48

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 3, வார்டு எண்.39க்குட்பட்ட பாலஜி நகர், பாத்திமாபுரம், பெரியார் நகர், பிரியா நகர், சோழன் நகர், சேரன் நகர், பாரதிதாசன் நகர் கிரீன் மார்கெட், காந்தி நகர், வசந்தம் நகர் வரையிலும் சுமார் 5789 குடியிருப்புகளுக்கு அம்ரூத் திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடை திட்ட பணிக்காக 42.26 கி.மீ கழிவுநீர் குழாய்களும் மற்றும் 704 எண்ணிக்கை ஆழ்நுழைவு தொட்டிகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்காக தோண்டப்பட்ட பள்ளங்களினால், ஏற்பட்ட மண்துகள்கள் மற்றும் பருவ கால மழையினால், ஆழ்நுழைவு தொட்டிகளில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றினால் மட்டுமே வீட்டு இணைப்புகள் வழங்க இயலும். எனவே, மேற்குறிப்பிட்டுள்ள ஆழ்நுழைவுத் தொட்டிகளில் உள்ள மழைநீரை மின்மோட்டார் வைத்து உறிஞ்சி வெளியேற்றவும், மண் நுண் துகள்களை அகற்றி சுத்தம் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.23.97 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக்காட்டிலும் 0.05 % குறைந்த விலைப்புள்ளியில் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த M/s. AK கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/16750 /2025 (மையம்)

**தீர்மானம் எண்.535 பொருள்: 48 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 49**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு அலுவலகம்–II வார்டு எண் 47க்குட்பட்ட ரேஸ் கோஸ் ரோடு பெரியார் கல்லூரியில் நீட் தேர்வு அன்று நடைபெறவுள்ளது தேர்வு மையத்தின் வெளியில் தற்காலிக பந்தல் மற்றும் குடிநீர் வசதிகள் அமைத்து தருதல் பணி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் COLREV/31613/2025 E2 நாள்.19.06.2026 – மதிப்பீடு ரூ. 0.47 இலட்சம் – ஒப்பந்தப்பத்திரம் நிறைவேற்றப்பட்டு, இப்பணியின் அவசர அவசியம் கருதி **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும்** 0.08% குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **திரு.ராமசாமி திருச்சி** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ3 /6253 /2026 (மையம்)

**தீர்மானம் எண்.536 பொருள்: 49 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 50**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு அலுவலகம்–II வார்டு எண் 59க்குட்பட்ட ஜமால் முகமது கல்லூரியில் **திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்காக Strong Room வாக்கு எண்ணும் அறைக்கு** காவல் பணிக்காக பணி அமர்த்தப்பட்டுள்ள காவல் துறையினருக்கு 23.04.2026 முதல் 04.05.2026 வரையில் மூன்று வேலை தேநீர் மற்றும் பிஸ்கட் வழங்கும் பணிமேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.0.79/–க்கு தயாரிக்கப்பட்டு, இப்பணியின் அவசர அவசியம் கருதி **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.29%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.RSK பில்டர்ஸ், திருச்சி** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ3 /2677 /2026 (மையம்)

**தீர்மானம் எண்.537 பொருள்: 50 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 51**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 3, வார்டு எண்.41 மற்றும் 42க்குட்பட்ட மஞ்சல்திடல் செபஸ்தியார் கோயில் தெரு, பூங்கோவில் தெரு, நேதாஜி நகர் பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மின்மோட்டார் உடன் பிவிசி தொட்டி பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் தெருமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே பொதுமக்களின் நலன் கருதி, மேற்குறிப்பிட்டுள்ள மஞ்சல்திடல் செபஸ்தியார் கோயில் தெரு, பூங்கோவில் தெரு, நேதாஜி நகர் ஆகிய பகுதிகளில் புதிதாக ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மின் மோட்டார் உடன் பிவிசி தொட்டி கட்டும் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.4.70/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக்காட்டிலும் 0.14 % குறைந்த விலைப்புள்ளியில் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த திரு.A.மணிகன்டன் திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/7171 /2026 (மையம்)

**தீர்மானம் எண்.538 பொருள்: 51 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்: 52**

இம்மாநகராட்சியின் வார்டுகுழு அலுவலகம்–4 மற்றும் 5ற்குட்பட்ட பகுதிகளில் உள்ள 22 கழிப்பிடங்களை பொதுமக்களிடம் கட்டணம் வசூலிக்காமல் கழிப்பறைகளை சுத்தம் செய்து பராமரிக்கப்படும் பணிகள் மாமன்ற தீர்மானம் எண்: 240 நாள் 21.02.2024ன்படி ஒரு கழிப்பறையை பராமரிக்க மாதம் ஒன்றுக்கு ரூ.29,777 வீதம் பராமரிக்கும் பணிகள் மெசர்ஸ். SCOPE, திருச்சி மற்றும் மெசர்ஸ். SEVI, திருச்சி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பேருந்து நிலையங்களில் அதிகமாக கூடும் பொதுமக்கள் சத்திரம் பேருந்து நிலையம் மற்றும் மத்திய பேருந்து நிலையம் பகுதிகளில் உள்ள கழிப்பிடங்களில் கட்டணம் செலுத்துவதை தவிர்த்து பேருந்து நிலையங்களின் வெளிப்புறங்களில் சிறுநீர் கழிப்பதால் சுகாதாரகேடு விளைவிப்பதை தொடர்ந்து பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி சத்திரம் பேருந்து நிலையத்தில் உள்ள பிங்க் கழிப்பறை, மற்றும் அரியலூர் பேருந்து நிலைய பொது கழிப்பறை மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களையும் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கரூர் பேருந்து நிறுத்தம் மற்றும் தஞ்சாவூர் பேருந்து நிறுத்தம் இடங்களில் உள்ள 2 பெண்கள் கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களை இனி பொதுமக்களிடம் கட்டணம் வசூலிக்காமல் சுத்தம் செய்து பராமரிக்கப்படும் பணிகள் தொண்டு நிறுவனங்களின் மூலம் பராமரிப்பு பணிகள மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களை பொதுமக்களிடம் கட்டணம் வசூலிக்காமல் சுத்தம் செய்து பராமரிக்கப்படும் பணிகள் மேற்கொள்ள M/s. FOUR H TRUST தொண்டு நிறுவனம் இசைவு கடிதம் அளித்துள்ளது.

| வ.எண் | விவரம் | எண்கள் | மாத பராமரிப்பு தொகை ரூ . |
|---|---|---|---|
| 1 | **சத்திரம் பேருந்து நிலையம்**<br>பிங்க் கழிப்பறை(4சீட்), அரியலூர் பேருந்து நிறுத்தம் கழிப்பறை ( 4 சிறுநீர் கழிப்பிடங்கள் மற்றும் 1 கழிப்பறை). டவுன் பஸ் நிறுத்துமிடம் (30 சிறுநீர் கழிப்பிடங்கள்) | 1 | 29,777 |
| 2 | **மத்திய பேருந்து நிலையம்**<br>1. கரூர் பேருந்து நிறுத்தம் பெண்கள் கழிப்பிடம் (7 சிறுநீர் கழிப்பிடங்கள் 6 கழிப்பறை), நம்ம டாய்லெட் (3சீட்), மற்றும் 30 சிறுநீர் கழிப்பிடங்கள்<br>2. தஞ்சாவூர் பேருந்து நிறுத்தம் பெண்கள் கழிப்பிடம் (8 சீட்), மற்றும் 43 சிறுநீர் கழிப்பிடங்கள் | 2 | 59,554 |
| | **மொத்தம்** | | **89,331** |

பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி சத்திரம் பேருந்து நிலையம் மற்றும் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள மேற்கண்ட கழிப்பிடங்களை பொதுமக்களிடம் கட்டணம் வசூலிக்காமல் சுத்தம் செய்து பராமரிக்கப்படும் பணிகள் M/s. FOUR H TRUST, திருச்சி தொண்டு நிறுவனத்தின் மூலம் ஒரு வருடம் மேற்கொள்வதற்கான செலவினம் ரூ.10.72 தொகைக்கும், M/s. FOUR H TRUST, திருச்சி தொண்டு நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள கழிப்பிடங்கள் M/s. FOUR H TRUST, திருச்சி தொண்டு நிறுவனத்தின் மூலம் ஒரு வருடத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் செலவினம் ரூ.10.72 இலட்சத்திற்கும் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவீனத்தினை 2026–2027 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட பொதுநிதியிலிருந்து 2305111 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பட்டியலில் வ.எண். 1இல் தெரிவிக்கப்பட்டுள்ள சத்திரம் பேருந்து நிலையம் வரியில்லா குத்தகை இனங்களை குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்யவும் அனுமதிக்கலாம்.

**எச்4/1205 /2024 (மையம்)**

**தீர்மானம் எண்.539 பொருள்: 52 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 53

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதியின் கீழ், ஒப்பந்தப்பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே, இப் பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு.K. ராமசாமி, ஒப்பந்ததாரர், திருச்சி அவர்கள் கோரியுள்ளார்

திரு.K. ராமசாமி, திருச்சி ஒப்பந்ததாரர் செலுத்திய முன் வைப்புத் தொகை ரூ.57481/- காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் ( **Lapsed Deposit Account**) கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | பிடித்தம் செய்யப்பட்டுள்ள நாள் | தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | பழைய வார்டு எண்.09க்குட்பட்ட ஓடத்துரை பகுதியில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணி<br>மதிப்பீடு ரூ.15.00 இலட்சம்<br>இ7/12222/2021(மையம்) | 29.11.2022<br>முதல் மற்றும் இறுதி பட்டியல் தொகை | 57481.00 |
| | | மொத்தம் | 57481,00 |

மேலும், மேற்கண்ட பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு தணிக்கையில் " எவ்வித தணிக்கை தடையும் இல்லை " என தெரிவிக்கப்பட்டுள்ளதால், பத்தி எண்.6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2,51,248/- சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது..

**அலுவலகக்குறிப்பு**.

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) ஒப்பந்ததாரர் திரு.K. ராமசாமி அவர்களுக்கு ரூ.57481/-யை திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/ 12222 /2021 (மையம்)**

**தீர்மானம் எண்.540 பொருள்: 53 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 54

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதியின் கீழ், ஒப்பந்தப்பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே, இப் பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு.P. வேலுச்சாமி, ஒப்பந்ததாரர், திருச்சி அவர்கள் கோரியுள்ளார்

திரு.P. வேலுச்சாமி, திருச்சி ஒப்பந்ததாரர் செலுத்திய முன் வைப்புத் தொகை ரூ.71815/- காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் ( **Lapsed Deposit Account**) கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | பிடித்தம் செய்யப்பட்டுள்ள நாள் | தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | பழைய வார்டு எண்.44க்குட்பட்ட மத்திய பேருந்து நிலையம் சென்னை பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள பெண்கள் சிறுநீர் கழிப்பிடத்தினை பராமரிப்பு பணி<br>மதிப்பீடு ரூ.13.60 இலட்சம் ( இ7/1019/2018(மையம்) | 09.05.2018<br>முதல் மற்றும் இறுதி பட்டியல் தொகை | 53927.00 |
| 2 | பழைய வார்டு எண்.48க்குட்பட்ட ரெட்டி தெரு பகுதியில் பழுதடைந்துள்ள குழந்தைகள் மையத்தை இடித்து விட்டு புதிய குழந்தைகள் வளர்ச்சி மையம் கட்டும் பணி<br>மதிப்பீடு ரூ.4.50 இலட்சம் ( இ7/4455/2016(மையம்) | 09.05.2018<br>முதல் மற்றும் இறுதி பட்டியல் தொகை | 17884.00 |
| | | மொத்தம் | 71811.00 |

மேலும், மேற்கண்ட பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு தணிக்கையில் " எவ்வித தணிக்கை தடையும் இல்லை " என தெரிவிக்கப்பட்டுள்ளதால், பத்தி எண்.6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.71811/- சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு</u>.

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) ஒப்பந்ததாரர் திரு.P. வேலுச்சாமி. அவர்களுக்கு ரூ.71811/−யை திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/ 7273 /2026 (மையம்)**

**தீர்மானம் எண்.541 பொருள்: 54 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 55

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதியின் கீழ், ஒப்பந்தப்பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே, இப் பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு.SB. ராஜா, ஒப்பந்ததாரர், திருச்சி அவர்கள் கோரியுள்ளார்

திரு.SB. ராஜா, திருச்சி ஒப்பந்ததாரர் செலுத்திய முன் வைப்புத் தொகை ரூ.198644/− காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் ( **Lapsed Deposit Account**) கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | பிடித்தம் செய்யப்பட்டுள்ள நாள் | தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | பழைய வார்டு எண்.09 கரூர் புறவழிச்சாலை அன்பில் சிலை சந்திப்பிலிருந்து மேம்பாலம் வரை தாங்கு சுவர் அமைத்து சாலை விரிவு படுத்தும் பணி<br><br>மதிப்பீடு ரூ.52.60 இலட்சம்<br>இ7/10782/2021(மையம்) | 05.09.2022 முதல் மற்றும் பகுதி பட்டியல் தொகை | 144278.00 |
| | | 08.09.2023 2ம் மற்றும் இறுதி பட்டியல் தொகை | 54366.00 |
| | | EMD 1%<br>DD No.238567<br>Date.31.12.2021<br>Indian Bank | 52600.00 |
| | | மொத்தம் | 251248.00 |

மேலும், மேற்கண்ட பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு தணிக்கையில் " எவ்வித தணிக்கை தடையும் இல்லை " என தெரிவிக்கப்பட்டுள்ளதால், பத்தி எண்.4ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2,51,248/− சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது..

<u>அலுவலகக்குறிப்பு</u>.

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) ஒப்பந்ததாரர் திரு.SB. ராஜா,, அவர்களுக்கு ரூ.2,51,248/−யை திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/ 10782 /2021 (மையம்)**

**தீர்மானம் எண்.542 பொருள்: 55 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 56

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அட்டவணையில் கண்டுள்ள பணியினை ரூ.97.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர் திரு.G. வெங்கடேஷ், திருச்சி அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. எனவே, இப்பணிக்கு செலுத்தியுள்ள முன் வைப்புத் தொகை, கூடுதல் வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ஆகியவற்றினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். இப்பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் நிலுவையில்லை.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் விவரம் | நாள் | காப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு குழு அலுவலகம் – IV, வார்டு எண்.61 (பழைய வார்டு எண்.35)க்குட்பட்ட காமராஜ் நகர் மாநகராட்சி தொடக்கப் பள்ளி கட்டிடம் திரும்ப கட்டும் பணி மற்றும் உட்கட்டமைப்பு ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளுதல். மதிப்பீடு ரூ.97.00 இலட்சம். | திரு. G. வெங்கடேஷ், திருச்சி | 22.12.2021 | 2,44,934/– |
| | | | 25.03.2022 | 1,41,461/– |

எனவே, மேற்படி பணிக்கு முதல் மற்றும் பகுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ரூ.2,44,934/–, இரண்டாம் மற்றும் இறுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ரூ.1,41,461/– ஆகியவற்றை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.G. வெங்கடேஷ், திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:**

அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு முதல் மற்றும் பகுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ரூ.2,44,934/–, இரண்டாம் மற்றும் இறுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ரூ.1,41,461/– ஆகியவற்றை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.G. வெங்கடேஷ், திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

இ8 / 9582 / 2020 (மையம்)

**தீர்மானம் எண்.543 பொருள்: 56 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 57

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.05, பழைய வார்டு எண்.60க்குட்பட்ட (புதிய வார்டு எண்.08) கீழ்கண்ட பணியினை மெர்சஸ். நாச்சியார் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிக்கு பிடித்தம் செய்துள்ள முன் வைப்பு தொகை மற்றும் காப்பு தொகையினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொண்டமைக்கு **தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.**

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள முன் வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை ஆகியவை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூ) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண்& வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ. எண் |
| 1 | பழைய வார்டு எண்.60க்குட்பட்ட காவல்க்கார தெரு 2வது பிரதான சாலையின் மழைநீர் வடிகாலுடன் சிமெண்ட் கான்கீரீட் தளம் அமைக்கும் பணி. **மதிப்பீடு ரூ.79.69 இலட்சம் இ2/ 2170/2021 (மை)** | மெர்சஸ். நாச்சியார் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள்.24.01.23 ரூ.79,60,004 | 3,98,000 (5 %) | XV | 138 | 1905 |
| | | | காப்புத் தொகை நாள்.24.01.23 (பட்டியலில் பிடித்தம்) | 79,690 | XV | 138 | 1906 |
| | | | வைப்புத் தொகை (EMD) காசோலை எண்.45909 நாள்.07.01.22 | 79,700 | XIV | 93 | 1240 |
| **மொத்தம்** | | | | **5,57,390** | | | |

ஒப்பந்ததாரர் மெர்சஸ். நாச்சியார் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள முன் வைப்பு/காப்புத் தொகைகளை ரூ.5,57,390/−ஐ, காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.5,57,390/−ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposite Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/2170/2021(மை)**

**தீர்மானம் எண்.544 பொருள்: 57 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 58

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணி முடிக்கப்பட்டு இறுதி பட்டியல் தொகை பெற்று ஆறாண்டுகளுக்கு மேல் ஆவதால், இப்பணிக்கு செலுத்தப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு மேற்படி திட்டப்பணியின் ஒப்பந்தக்காரர் திரு. எம். கார்த்திக், என்பவர் கோரியுள்ளார்.

மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டப்பணிக்கு Defects Liability period முடிவடைந்து விட்டது மற்றும் தணிக்கை தடைகள் நிலுவை ஏதுமில்லை.

| வ. எண். | பணியின் விபரம் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், மண்டலம் எண்.1 புதிய வார்டு எண்.06 (பழைய வார்டு எண்.6) அகிலாண்டேஷ்வரி நகர் பகுதியில் பூங்கா அமைக்கும் பணி. மதிப்பீடு ரூ.55.00 லட்சம். | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை UCO Bank DD No.147894 Date.24.08.2018 | **55000** |
| | | கூடுதல் முன்வைப்புத் தொகை SBI Bank DD No.260111 Date.10.10.2018. | **55000** |
| | | முதலாவது மற்றும் பகுதிப் பட்டியல் நாள்.21.06.2019 (5%) | **129605** |
| | | இரண்டாவது மற்றும் பகுதிப் பட்டியல் நாள்.24.10.2019 (5%) | **125695** |
| | | மூன்றாவது மற்றும் இறுதி பட்டியல் நாள்.24.10.2019 (5%) | **13122** |
| | **மொத்தம்** | | **378422** |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள தொகை ரூ.3,78,422/−ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரு. எம். கார்த்திக், ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்குவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

காலங்கடந்த வைப்புத் தொகை (Lapsed Deposit Account) கணக்கு தலைப்பில் வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட தொகை ரூ.3,78,422/−ஐ திரு. எம். கார்த்திக், திருச்சிராப்பள்ளி ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ1/10859/2020(மை)**

**தீர்மானம் எண்.545 பொருள்: 58 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 59

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணி முடிக்கப்பட்டு இறுதி பட்டியல் தொகை பெற்று நான்காண்டுகளுக்கு மேல் ஆவதால், இப்பணிக்கு செலுத்தப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு மேற்படி திட்டப்பணியின் ஒப்பந்தக்காரர் திரு. எம். கார்த்திக், என்பவர் கோரியுள்ளார்.

மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டப்பணிக்கு Defects Liability period முடிவடைந்து விட்டது மற்றும் தணிக்கை தடைகள் நிலுவை ஏதுமில்லை.

| வ. எண். | பணியின் விபரம் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், மண்டலம் எண்.1 புதிய வார்டு எண்.06 (பழைய வார்டு எண்.6) தெற்கு 5வது பிரகாரம் பகுதியில் கார்த்திகேயன் கார்டன் பூங்கா அமைக்கும் பணி. மதிப்பீடு ரூ.80.60 லட்சம். | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை UCO Bank DD No.147896 Date.24.08.2018 | **81000** |
| | | கூடுதல் முன்வைப்புத் தொகை SBI Bank DD No.260112 Date.04.12.2018 | **81000** |
| | | முதலாவது மற்றும் பகுதிப் பட்டியல் நாள்.12.07.2019 (5%) | **139620** |
| | | இரண்டாவது மற்றும் பகுதிப் பட்டியல் நாள்.31.12.2019 (5%) | **258319** |
| | | மூன்றாவது மற்றும் இறுதி பட்டியல் நாள்.22.04.2021 (5%) | **3063** |
| | | **மொத்தம்** | **563002** |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள தொகை ரூ.5,63,002/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரு. எம். கார்த்திக், ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்குவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

காலங்கடந்த வைப்புத் தொகை (Lapsed Deposit Account) கணக்கு தலைப்பில் வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட தொகை ரூ.5,63,002/–ஐ திரு. எம். கார்த்திக், திருச்சிராப்பள்ளி ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ1/5349/2019(மை)**

**தீர்மானம் எண்.546 பொருள்: 59 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:60

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அட்டவணையில் கண்டுள்ள பணியினை ரூ.76.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர் திருமதி.L. தீபஜோதி, திருச்சி அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. எனவே, இப்பணிக்கு செலுத்தியுள்ள முன் வைப்புத் தொகை, கூடுதல் வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகைகள் ஆகியவற்றினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். இப்பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் நிலுவையில்லை.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் விவரம் | நாள் | காப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு எண்.57க்குட்பட்ட எடமலைப்பட்டிபுதூர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டும் பணி. மதிப்பீடு ரூ.76.00 இலட்சம். | திருமதி. L. தீபஜோதி, திருச்சி | 06.09.2022 (முன் வைப்புத் தொகை) | 76,000/– |
| | | | 21.09.2022 (கூடுதல் வைப்புத் தொகை) | 76,000/– |
| | | | 15.02.2023 (காப்புத் தொகை) | 79,463/– |

எனவே, மேற்படி பணிக்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகை ரூ.76,000/–, கூடுதல் வைப்புத் தொகை ரூ.76,000/–, முதல் மற்றும் பகுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ரூ.79,463/– ஆகியவற்றை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திருமதி.L. தீபஜோதி, திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:**

அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகை ரூ.76,000/–, கூடுதல் வைப்புத் தொகை ரூ.76,000/–, முதல் மற்றும் பகுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ரூ.79,463/– ஆகியவற்றை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திருமதி.L. தீபஜோதி, திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ8 / 6759 / 2022 (மையம்)**

**தீர்மானம் எண்.547 பொருள்: 60 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 61

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 1க்குட்பட்ட சத்திரம் பேருந்து நிலைய வளாகத்தின் வெளிபுறம் புதியதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தின் கடை 04,12,13,14,15,16,17,18,19,20,21,22 ஆகிய 12 கடைகளுக்கு 17.07.2027ம் தேதியன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டதால் கேள்வி இல்லை. ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. ஒப்பந்தப்புள்ளி தொகை விவரங்கள் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கடை எண் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விவரம் | | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஏல கேள்வித் தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 04 | 1 | அ. கரீம் அகமது<br>த/பெ அப்துல் ஜப்பார்<br>42/7, குத்பிஷா நகர்,<br>தென்னூர்.திருச்சி–17 | – | 31200 | கடை எண்.04க்கு 17.07.2026 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டதால் போட்டி இல்லாததால் ஏலம் நடைபெறவில்லை. 14 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் வரிசை எண்.1ல் கண்ட கரீம் அகமது என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.31200/– உயர்ந்த பட்ச தொகையாகும். மேற்படி தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ.3744/–ஐ விட ரூ.27456 கூடுதலாக (833%) உள்ளதால் வரபெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம், |
| | | 2 | M.ராவியத்துல் அதவியா<br>37/5, காயித மில்லத் காலனி,<br>மேலசிந்தாமணி திருச்சி–02 | – | 28500 | |
| | | 3 | ஜன்னத்துல் பிர்தோஸ்<br>8D/11. சுப்ரமணியசுவாமி கோவில் தெரு, மேலசிந்தாமணி திருச்சி | – | 26500 | |
| | | 4 | S.நூரூல் அமீன்<br>14/B சந்தனபுரம் வரகனேரி திருச்சி–8 | – | 25100 | |
| | | 5 | S.யாஸ்மின் பானு<br>14/A, நத்தர்ஸா பள்ளிவாசல், மதுரை ரோடு, திருச்சி–8 | – | 24100 | |
| | | 6 | I.முகமது அஸ்லம்<br>55/A காவேரி பார்க் பழைய கரூர் ரோடு திருச்சி | – | 22200 | |
| | | 7 | K.பாபு<br>3/138 பள்ளிக்கூடத் தெரு, தெற்கு உக்கடை,அரியமங்கலம், திருச்சி | – | 21005 | |
| | | 8 | M.ரைஹானா பானு<br>145/1 கோவிந்த கோணார்<br>2வது தெரு, சங்கிலியாண்டபுரம் திருச்சி | – | 21100 | |
| | | 9 | முகமது பாரூக்<br>24, காயித் மில்லத் நகர், தென்னூர், திருச்சி | – | 20200 | |
| | | 10 | D.கணேசன்<br>2, கிழக்கு தெரு, மலைக்கோட்டை திருச்சி | – | 18102 | |
| | | 11 | V.வினோத்குமார்<br>2 கிழக்குத் தெரு, மலைக்கோட்டை திருச்சி | – | 16430 | |
| | | 12 | M.ரேவதி<br>1B, வாத்தியார் சந்து காந்தி மார்க்கெட், திருச்சி | – | 16000 | |
| | | 13 | வி.அனிதா<br>2/2 சத்தியம் பிளாக்<br>மல்லிகை தெரு, தேரடிபஜார், திருச்சி | – | 15151 | |
| | | 14 | D.சதிஸ்குமார்<br>51, செம்பருத்தி தெரு, சஞ்சீவி நகர், திருச்சி | – | 15000 | |
| | | 15 | E.சர்தார்<br>54,சந்தனபுரம், வரகனேரி, திருச்சி | கேள்வி இல்லை | – | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 12 | 1 | R.செந்தில்குமார்<br>5/179A பெரியார் நகர்<br>கம்பரசம் பேட்டை<br>திருச்சி-101 | - | 10100 | கடை எண்.12க்கு 17.07.2026 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் வரிசை எண்.1ல் கண்ட செந்தில்குமார் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.10100/- உயர்ந்த பட்ச தொகையாகும். மேற்படி தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ.3640/-ஐ விட ரூ.6460 கூடுதலாக (277%) உள்ளதால் வரபெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம், |
| | | 2 | M.ரைஹானா பானு<br>145/1 கோவிந் கோனார்<br>2வது தெரு,<br>சங்கிலியாண்டபுரம்<br>திருச்சி | - | 9100 | |
| | | 3 | D.கணேசன்<br>2, கிழக்கு தெரு,<br>மலைக்கோட்டை,<br>திருச்சி | - | 6501 | |
| 3 | 13 | 1 | S.கார்த்திக் ராஜா<br>4C/6, திரௌபதியம்மன்<br>கோவில் தெரு,<br>கிழச்சிந்தாமணி,<br>திருச்சி | - | 10000 | கடை எண்.13க்கு 17.07.2026 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளதால், மேற்படி ஒப்பந்தபுள்ளியை பரிசிலனை எடுத்துகொள்ளபடவில்லை. எனவே மேற்படி கடைக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| 4 | 14 | 1 | T.யோகேஷ்வரன்<br>21 பிள்ளை தோப்பு தெரு<br>பெரிய பாலம்<br>குளித்தலை | - | 11000 | கடை எண்.14க்கு 17.07.2026 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் வரிசை எண்.1ல் கண்ட யோகேஷ்வரன் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.11000/- உயர்ந்த பட்ச தொகையாகும். மேற்படி தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ.3640/-ஐ விட ரூ.7360 கூடுதலாக(302%) உள்ளதால் வரபெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம், |
| | | 2 | A.ஷர்மிளா பானு<br>17/10-50 மீர்ஹசனுல்லா<br>ஷா தர்கா காலணி,<br>பென்சனர் தெரு,<br>தென்னூர் | - | 8400 | |
| | | 3 | K.கிருஷ்ணன்<br>51A, திப்பிரான் தொட்டித்<br>தெரு, திருச்சி | - | 6500 | |
| 5 | 15 | 1 | ஆயிஷா பஷீர்<br>S2, 2 வது மாடி, ராயல்<br>ஸ்கொயர்<br>அப்பார்ட்மெண்ட்,<br>லாசன் ரோடு,<br>கன்டோன்மென்ட்,<br>திருச்சி | - | 8000 | கடை எண்.15க்கு 17.07.2026 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் வரிசை எண்.1ல் கண்ட ஆயிஷா பஷீர் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.8000/- உயர்ந்த பட்ச தொகையாகும். மேற்படி தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ.3640/-ஐ விட ரூ.4360 கூடுதலாக (219%) உள்ளதால் வரபெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம், |
| | | 2 | K.கார்த்திகேயன்<br>51A, திப்பிரான் தொட்டித்<br>தெரு, திருச்சி | - | 6400 | |
| 6 | 16 | 1 | அ.முகமது சையத் ஷா<br>17/10-50 மீர்ஹசனுல்லா<br>ஷா தர்கா காலணி,<br>பென்சனர் தெரு,<br>தென்னூர் | - | 7500 | கடை எண்.16க்கு 17.07.2026 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் வரிசை எண்.1ல் கண்ட முகமது சையத் ஷா என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.7500/- உயர்ந்த பட்ச தொகையாகும். மேற்படி தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ.3640/-ஐ விட ரூ.3860 கூடுதலாக (206%) உள்ளதால் வரபெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம், |
| | | 2 | S.மாலதி<br>5 முதல்விதி வெனிஸ்<br>தெரு, சிந்தாமணி<br>திருச்சி-2 | - | 6000 | |
| | | 3 | M.அணீஸ் பாத்திமா<br>37/12 காயிதே மில்லத்<br>காலனி, மேலசிந்தாமணி<br>திருச்சி | - | 5800 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 17 | 1 | S.பிரவின்<br>5/179A பெரியார் நகர்<br>கம்பரசம் பேட்டை<br>திருச்சி–101 | – | 6500 | கடை எண்.17க்கு 17.07.2026 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் வரிசை எண்.1ல் கண்ட .பிரவின் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.6500/– உயர்ந்த பட்ச தொகையாகும். மேற்படி தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ.3640/–ஐ விட ரூ.2860 கூடுதலாக (178%) உள்ளதால் வரபெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம், |
| | | 2 | அப்துல் கஃபூர்<br>1/277, 8வது கிராஸ்<br>வாசன் சிட்டி<br>நாச்சிகுறிச்சி,<br>சோமரசம்பேட்டை,<br>திருச்சி | – | 6000 | |
| 8 | 18 | 1 | மு.செந்தில் குமார்<br>0/54, அன்னை இந்திராகாந்தி தெரு, ஜீவா நகர், திருச்சி–8 | – | 5500 | கடை எண்.13க்கு 17.07.2026 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளதால், மேற்படி ஒப்பந்தபுள்ளியை பரீசிலனை எடுத்துகொள்ளபடவில்லை. எனவே மேற்படி கடைக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| 9 | 19 | 1 | ம.சாய் சரண்<br>11–A, சுப்ரமண்ய சாமி கோவில் தெரு,<br>W.B.ரோடு<br>திருச்சி–8 | – | 6100 | கடை எண்.19க்கு 17.07.2026 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் வரிசை எண்.1ல் கண்ட சாய் சரண் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.6100/– உயர்ந்த பட்ச தொகையாகும். மேற்படி தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ.3640/–ஐ விட ரூ.2460 கூடுதலாக (167%) உள்ளதால் வரபெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம், |
| | | 2 | ஜி.லஷ்மி பிரியா<br>11–A, சுப்ரமண்ய சாமி கோவில் தெரு,<br>W.B.ரோடு<br>திருச்சி–8 | – | 6000 | |
| | | 3 | ஜா.ஷகிலா<br>30/4 ஆழ்வார்த் தோப்பு<br>தென்னூர், திருச்சி | – | 5100 | |
| 10 | 20 | 1 | T.பரத்<br>21 பிள்ளைத் தோப்பு தெரு, பெரிய பாலம்,<br>குளித்தலை | – | 11000 | கடை எண்.20க்கு 17.07.2026 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் வரிசை எண்.1ல் கண்ட பரத் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.11000/– உயர்ந்த பட்ச தொகையாகும். மேற்படி தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ.3640/–ஐ விட ரூ.7360 கூடுதலாக (302%) உள்ளதால் வரபெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம், |
| | | 2 | S.ஐஸ்வர்யா<br>13, லெஷ்மி நகர்,<br>குழுமணி ரோடு,<br>உறையூர், திருச்சி | – | 6700 | |
| | | 3 | S.சின்னப்பொன்னு<br>0/54, அன்னை இந்திராகாந்தி தெரு,<br>ஜீவா நகர், திருச்சி–8 | – | 5500 | |
| 11 | 21 | 1 | R.சாந்தா<br>C39 காவெரி நகர்,<br>மேலசிந்தாமணி<br>திருச்சி | – | 10100 | கடை எண்.21க்கு 17.07.2026 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் வரிசை எண்.1ல் கண்ட சாந்தா என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.10100/– உயர்ந்த பட்ச தொகையாகும். மேற்படி தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ.3640/–ஐ விட ரூ.6460 கூடுதலாக (277%) உள்ளதால் வரபெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம், |
| | | 2 | மகாலெஷ்மி<br>13, லெஷ்மி நகர்,<br>குழுமணி ரோடு,<br>உறையூர், திருச்சி | – | 6900 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | 22 | 1 | V.பாலகுமார்<br>53 சஞ்சய் காந்தி நகர்<br>மண்ணச்சநல்லூர் | – | 10500 | கடை எண்.22க்கு 17.07.2026 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் வரிசை எண்.1ல் கண்ட பாலகுமார் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை. ரூ.10500/– உயர்ந்த பட்ச தொகையாகும். மேற்படி தொகை மாநகராட்சி நிர்ணயம் செய்த மாதவாடகை தொகை ரூ.3640/–ஐ விட ரூ.6860 கூடுதலாக (288%) உள்ளதால் வரபெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம், |
| | | 2 | N.ஸ்ரீதர்<br>13, லெஷ்மி நகர்,<br>குழுமணி ரோடு,<br>உறையூர், திருச்சி | – | 7000 | |

<u>அலுவலக குறிப்பு</u>

(அ) அரசாணை (2ப) எண் 66ன் படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச குத்தகை / உரிமத் தொகையை விட 100 சதவிகிதத்திற்கும் கூடுதலாக குத்தகை / உரிம இனங்களுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில், 151% முதல் 250% வரை கோரும் நிலையில், வைப்புத் தொகையை 2 மடங்காகவும், 250% முதல் 350% வரை கோரும் நிலையில் 3 மடங்காகவும். ஒவ்வொரு கூடுதல் 100 சதவிகிதத்திற்கும் ஒரு மடங்கு வைப்புத்தொகை உயர்த்தி வசூல் செய்திடவும், மற்றும் 12 மாத கூடுதல் வைப்புத் தொகை நிர்ணயம் செய்யலாம்.

(ஆ).மேற்கண்ட பட்டியலில் கலம் 7ல் குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் கடை எண்கள். 04,12,14,15,16,17,19,20,21,22 ஆகிய 10 கடைகளுக்கு வரபெற்றுள்ள உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்பது குறித்து மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

<u>அ1/ 7194 /2023/(வா.கு–1)</u>

**தீர்மானம் எண்.548 பொருள்: 61 –12 கடைகளுக்கான ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்து புதிதாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி E.Tender முறையில் கோர தீர்மானிக்கப்பட்டது.**

## பொருள்: 62

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 2025–2026ம் ஆண்டுக்கான பணியாளர்கள் மற்றும் அலுவலர்களில் பணியாற்றி வருபவர்களின் விவரம் மற்றும் காலி பணியிடங்களின் விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Designation | Grade | Sanctioned post | In position | Vacant post |
|---|---|---|---|---|---|
| 1 | Commissioner (AD Cadre) | A | 1 | 1 | 0 |
| 2 | Deputy Commissioner (JD Cadre) | A | 2 | 2 | 0 |
| 3 | AC (Zone) | B | 5 | 3 | 2 |
| 4 | AC (Revenue) | B | 1 | 1 | 0 |
| 5 | AC (Personnel) | B | 1 | 1 | 0 |
| 6 | AC (Accounts) | B | 1 | 0 | 1 |
| 7 | City Health Officer | B | 1 | 1 | 0 |
| 8 | Assistant City Health Officer | B | 1 | 0 | 1 |
| 9 | City Engineer | B | 1 | 1 | 0 |
| 10 | Deputy City Engineer | B | 3 | 0 | 3 |
| 11 | Zonal Engineer | B | 5 | 2 | 3 |
| 12 | City Planner | B | 1 | 1 | 0 |
| 13 | Accounts Officer | B | 1 | 1 | 0 |
| 14 | Council Secretary | B | 1 | 0 | 1 |
| 15 | Public Relation Officer | B | 1 | 0 | 1 |
| 16 | Administrative Officer | B | 5 | 5 | 0 |
| 17 | Revenue Officer | B | 1 | 1 | 0 |
| 18 | Vetinary Medical Officer | B | 1 | 1 | 0 |
| 19 | Assistant Executive Engineer | B | 5 | 4 | 1 |
| 20 | Assistant Engineer / Junior Engineer | B | 25 | 25 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | Junior Engineer (Automobile) | B | 1 | 0 | 1 |
| 22 | Assistant City Planner | B | 10 | 1 | 9 |
| 23 | Planning Inspector | B | 10 | 9 | 1 |
| 24 | Superintendent | B | 16 | 13 | 3 |
| 25 | Assistant Revenue Officer | B | 5 | 4 | 1 |
| 26 | Assistant | C | 23 | 18 | 5 |
| 27 | Personal Clerk | C | 3 | 0 | 3 |
| 28 | Junior Assistant | C | 46 | 36 | 10 |
| 29 | Driver | C | 3 | 47 | 0 |
| 30 | Sanitary Officer | C | 5 | 5 | 0 |
| 31 | Sanitary Inspector | C | 25 | 25 | 0 |
| 32 | Entomologist | C | 1 | 0 | 1 |
| 33 | Draughtsman | C | 8 | 2 | 6 |
| 34 | Technical Assistant / Public Works Overseer | C | 50 | 33 | 17 |
| 35 | Electrical Superintendent | B | 1 | 0 | 1 |
| Total | | | 270 | 243 | 71 |

**அலுவலக குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**சி1 / 12378 / 2025 (மை)**

**தீர்மானம் எண்.549 பொருள்: 62 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்: 63

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4 மற்றும் மண்டலம்–5 அண்ணாநகர் இணைப்பு சாலை பகுதியில் உய்யக்கொண்டான் ஆற்றின் குறுக்கே நடைமேம்பாலம் (Pedestrian bridge) அமைக்கும் பணியினை ரூ.104.00 லட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் நாள்.11.03.2024ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.319/2024–25ன் வாயிலாக 11.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற மெசர்ஸ் சிவசக்தி இண்டஸ்ட்ரீஸ். திருச்சி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்ற தீர்மானம் எண்.579 நாள் 29.08.2025 ஏற்று அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்பத்திரம் நிறைவேற்றித் தரக் கோரி மேற்கண்ட M/s Sivasakthi Industries. Trichy நிறுவனத்திற்கு 10.09.2025ம் தேதிகளில் உரிய அறிவிப்பு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் ஒப்பந்தப்பத்திரம் நிறைவேற்றி தர முன்வராததால், வேலை உத்திரவு வழங்கப்படவில்லை.

தற்போது மேற்படி பணியினை நிர்வாக நலன் கருதி ரத்து செய்வதற்கு மேற்கண்ட நிறுவனத்தால் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின்போது அளிக்கப்பட்ட உரிமத்தொகையும் (EMD) திரும்பதரததல்ல என தெரிவித்து மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. நிர்வாக நலன் கருதி மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்வதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஒந்தப்பத்திரம் நிறைவேற்றப்படாமல் இருப்பதால், மேற்படி பணிக்கு L1 ஒப்பந்தக்காரர் செலுத்தியுள்ள ஒப்பந்தப்புள்ளி (NSC) முன்வைப்புத் தொகை ரூ.1,05,000/–ஐ பறிமுதல் செய்வதற்கு அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கு இதர L2 & L3 ஒப்பந்தக்காரர்கள் செலுத்தியுள்ள ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகைகளை திரும்ப வழங்கலாம்.,

**இ4/40300/2024/மையம்**

**தீர்மானம் எண்.550 பொருள்: 63 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 64

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண். 57 (பொன்மலைக் கோட்டம்), பிராட்டியூர் கிழக்கு **கிராமம், நகரபுல எண் 107/4, வார்டு AL, பிளாக் எண் 27 – ல்** கட்டுப்பட்ட 0.45 **ஏக்கர் (1817.40 ச.மீ.)** பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேசித்துள்ள 14 குடியிருப்புகள் கொண்ட மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் மாவட்ட ஊரமைப்பு அலுவலகம் , திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் இணையதள செயல் முறை ந.க.எண் SWP/KL55SQMA/65082/2026/2026/TCP, நாள் 25.06.2026ல் மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு அனுமதி எண். 157/2026 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் மனுதாரர் திரு. J.P. ரதி அவர்களுக்கு வழங்கப்பட்டு மேல் நடவடிக்கைக்காக மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் இருந்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உத்தேச மனைபிரிவு இறுதி ஒப்புதலுக்காக வரப்பெற்றுள்ளது.

மேற்படி மனைப்பிரிவின் வரைபடத்தில் கண்டுள்ள 626.11 ச.மீ பரப்பு சாலைகள், மூலை முடக்கு உட்பட, 6.54 ச.மீ பரப்பு பொது உபயோக இடம், தானசாசன பதிவு எண். 3711/2026, நாள்.16.06.2026–ன் மூலம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையாளருக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டும் மற்றும் 6.66ச.மீ பரப்பு மின் பகிர்மான கழகத்திற்கான திறவிடம் தானசாசன பதிவு எண். 3806/2026, நாள்.19.06.2026–ன் மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மாநகராட்சி ஆணையர் பெயரில் மனுதாரர் தமது சொந்த செலவில் பட்டா மாறுதல் மேற்கொள்ள வேண்டும்.

மேற்படி இடத்தில் உத்தேசித்துள்ள 14 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு விண்ணப்பதாரரால் அரசாணை எண். 181 நாள். 09.12.2020 –ன் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022 டிபி –2 நாள். 20.10.2022 – ன் படி சாலை வசதி, குடிநீர் குழாய் மற்றும் மழைநீர் வடிகால் வசதி, தெருவிளக்கு மற்றும் பாதாள சாக்கடை ஆகிய பணிகளை முறையாக அமைக்கப்பட்டு இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர பரிசோதனை சான்று பெறப்பட்ட பிறகு இறுதி ஒப்புதல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் வழங்கப்படும்.

எனவே, அரசாணை எண். 181 நாள். 09.12.2020 –ன் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022 டிபி –2 நாள். 20.10.2022 – ன் படியும், மேற்படி சாலைகள் மற்றும் பொது உபயோக இடம் ஆகியவற்றை தானமாக பெறப்பட்டதற்கு நகர் ஊரமைப்பு துறையின் நிபந்தனைகளுடன் 14 மனைகள் கொண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

